வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams of North America
SINCE 1988

இலையுதிர் மலர்

# அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2050 / மார்கழி / **JANUARY - 2020**




## 38 தமிழ்ச்சங்கங்களின் சுவையான செய்திக் கட்டுரைகள்





















## உங்களுக்குத் தெரியுமா? வினாக்கள்...

# பேரவைத் தலைவரிடமிருந்து...



அன்புள்ள பேரவை உறுப்பினர் தமிழ்ச்சங்கத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பேரவைப் பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், கொடையாளர்கள், ஆர்வலர்கள் அனைவருக்கும் பொங்கல், புத்தாண்டு வாழ்த்துகள் உரித்தாகுக. இலையுதிர் கால அருவி இதழ் வழியாக உங்களைச் சந்திப்பதில் பேருவகை அடைகிறேன்.

உங்கள் தமிழ்ச்சங்கப் பொங்கல் விழா நிகழ்ச்சிகளில் தமிழ் மரபு சார்ந்த கலை நிகழ்ச்சிகளை இந்தத் தலைமுறைச் சிறார்கள் எண்ணங்களில் பதியுமாறு எடுத்து நடத்த வேண்டுகிறேன். பேரவையின் 33 ஆவது தமிழ் விழா அட்லாண்டா மாநகரில் வரும் ஜூலை 3, 4, 5 தேதிகளில் நடக்கவுள்ளதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். 2020 தமிழ் விழாவை அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் எடுத்து நடத்துகிறது; விழா ஏற்பாடுகள் வேகம் எடுத்துள்ளன. விழா ஒருங்கிணைப்பாளர் திரு. எழிலன் இராமராசுவும், இணை ஒருங்கிணைப்பாளர் திரு. சாமிநாதன் அண்ணாமலையும், விழாக் குழுக்களும் சிறப்பாகப் பணிகளை முன்னெடுத்து வருகிறார்கள். பேரவைத் தமிழ்விழாவில் தன்னார்வத் தொண்டர்களாக பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் பேரவைச் செயலாளரை (secretary@fetna.org) மின்னஞ்சலில் தொடர்ப்பு கொள்ள வேண்டுகிறேன்.

பேரவையின் ஏழாம் ஆண்டு தமிழிசை நிகழ்ச்சி சென்னையில் கடந்த டிசம்பர் மாதம் சீரும் சிறப்புமாக, திருமதி அனுராதா கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இசை நிகழ்ச்சியுடன் நடைபெற்றது. மேலும் மதுரையில் நடந்த உலகத் தமிழிசை மாநாட்டிலும், கானாடு காத்தானில் நடைபெற்ற முனைவர் அழகப்பா இராம்மோகனின் 'வள்ளுவர் அறிவகம்' அடிக்கல் நாட்டு விழாவிலும் பேரவையின் சார்பில் கலந்து கொண்டது சிறப்பாக அமைந்தது.

தொடர்ந்து தமிழ்ப்பணி ஆற்றுவோம்.

தமிழன்புடன்,

உங்கள் தலைமைப் பணியாளன்

**சுந்தர் குப்புசாமி**

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

### வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை செயற்குழு



தலைவர்
திரு. சுந்தர் குப்புசாமி

செயலர்
திரு.சுந்தரபாண்டியன் சபாபதி

துணைத் தலைவர்
திரு. கால்டுவெல் வேள்நம்பி

இணைச் செயலர்
திரு. சச்சிதானந்தன் வெங்கடகிருஷ்ணன்

பொருளாளர்
திரு. விஜயகுமார் தேவராஜ்

### வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை இயக்குனர் குழு



திருமதி. விஜி அழகர்

திரு. நம்பிராஜன் வைத்திலிங்கம்

திரு. இளங்கோவன் தங்கவேலு

திரு. சிவா வேலுபிள்ளை

# ஆசிரியர் கடிதம்



ஆண்டு 2020 பிறந்து, தமிழர் திருநாளை நோக்கித் தவழ்ந்து கொண்டிருக்கிறது. ‘ஆண்டொன்று போனால் வயதொன்று போகும், அதற்கு முன்னாலே....’ எனும் கண்ணதாசன் வரிகளுக்கு மெருகேற்றும் வகையில், நமது தமிழ்ச்சங்கங்கள் 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பருவமான இலையுதிர் காலத்தில், சிறப்பான பல மரபு மற்றும் புதுமை நிகழ்வுகளை நடத்தியுள்ளன என்பது இந்த இதழுக்கு வந்துள்ள கட்டுரைகளிலிருந்து அறிய முடிகிறது. நமது அருவியும் புது முயற்சிகள் மேற்கொள்வதில் சங்கங்களுக்குச் சளைத்ததல்ல எனக் காட்டிட, சோதனை முறையில், அடுத்த சில இதழ்களை மின் வடிவில் மலரச் செய்யவிருக்கிறது. இது நமது சங்கங்களின் நிகழ்வுகளையும், சாதனைகளையும் மின்னூடகங்கள் வாயிலாக மேலும் பலரை அடையச் செய்ய ஏதுவாக இருக்கும் என்பது திண்ணம்.

முத்தமிழ் விழா, தீபாவளி விழா, இசை நிகழ்ச்சிகள், விளையாட்டு போட்டிகள், மரபு இசை என வழமையான கொண்டாட்டங்கள் மட்டுமின்றி, வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் தமிழிருக்கைக்கு நிதி திரட்டல், ஒரு நிமிடத்தில் ஓர் தலைப்பு, 10 ஆம் ஆண்டு தமிழிசை விழா, சங்கங்களுக்கு என்றும் துணையாயிருக்கும் மூத்த தலைமுறையினரைப் பாராட்டி மரியாதை செய்தல், நூல் வெளியீடு, தமிழ் படிக்கும் மற்றும் இருமொழி சான்றிதழ் பெறும் குழந்தைகளுக்குப் பாராட்டு மற்றும் ஊக்க உதவி வழங்கும் நிகழ்ச்சிகள், குழந்தைகளின் தமிழ் பேசும் திறன் வளர்க்கும் வகையிலான நீயா நானா நிகழ்ச்சிகள், தமிழக அமைச்சர்கள் பங்கேற்ற நிகழ்வுகள், பல்வேறு சமூக உதவி நிகழ்ச்சிகள் என வியக்கும் பல செய்திகளை இந்த அருவி தாங்கி வருவது மகிழ்ச்சியான ஒன்று. 2020 பேரவைத் தமிழ் விழாவினை உங்கள் அனைவரின் பேராதரவுடன் சிறப்புற நடத்திட ஏற்பாடுகள் செய்து வரும் அட்லாண்டா தமிழ்ச்சங்கத்திற்கு வாழ்த்துக்கள்.

இந்த இலையுதிர் மலருக்குக் கட்டுரைகள் வழங்கிய தமிழ்ச்சங்கச் செயற்குழுக்களுக்கும், வழமைபோல் அயராது உழைத்துத் தொகுத்த அருவி ஆசிரியர் குழுவிற்கும் நன்றிகள் பல. அடுத்து வரவிருக்கும் மலரில் மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்

**இளங்கோவன் தங்கவேலு**




## உள்ளே...

நியூ யார்க் தமிழ்ச்சங்கத்தில் தீபாவளிக் கொண்டாட்டம் - 04
உவகை பொங்கும் தமிழர் திருநாள்! -05
தமிழ்ச் சங்கச் செய்திகள் -06
‘திருக்குறள் அறிவகம்’ விழா காட்சிகள் -9
தமிழ்ச்சங்கப் பேரவையின் தமிழிசை விழா காட்சிகள் -23

# நியூ யார்க் தமிழ்ச்சங்கத்தில் தீபாவளிக் கொண்டாட்டம்




50 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நியூ யார்க் தமிழ்ச்சங்கத்தின் தீபாவளிக் கொண்டாட்டம், கடந்த நவம்பர் 9 ஆம் நாளன்று, திருமதி உமையாள் முத்து அவர்களின் கவியரசர் கண்ணதாசன் குறித்த சிறப்புரையுடன் தொடங்கியது. திரு B H அப்துல் ஹமீது அவர்கள் தொகுத்து வழங்கிய இசை நிகழ்வில், ஹரீஷ் ராகவேந்திரா, சூப்பர் சிங்கர் கிருஷ்ணா, அர்ஜூன் அடப்பள்ளி, ஷ்ரத்தா கணேஷ், மற்றும் கனடாவின் சூப்பர் சன்ஸ் இசைக் குழுவினர் பல அருமையான திரைப் பாடல்களை வழங்கியது மக்கள் மனம் கவர்ந்த நிகழ்வாக அமைந்தது. உணவு இடைவேளைக்குப் பின்னர், திரு B H அப்துல் ஹமீது அவர்கள், நியூ யார்கின் உள்ளூர்ப் பாடகர்களின் திறமைக்கும், நினைவாற்றலுக்கும் சவால் விடும் வண்ணம், நேர்த்தியுடனும் நகைச்சுவையுடனும் நடத்திய 'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சி ஒரு வரலாற்று நிகழ்வு. இசையில் மூழ்க வந்த 400-க்கும் மேற்பட்ட ரசிகர்கள் அனைவரும் நிகழ்ச்சியின் நிறைவு வரை காத்திருந்து ரசித்தது இன்னுமொரு சிறப்பு.





# நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கத்தின் 30 ஆம் ஆண்டு விழா

நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. இயல், இசை, நாடகம், பொழுதுபோக்கு என்று கலை விருந்துகள் படைப்பதோடு மட்டுமின்றி நியுஜெர்சி தமிழ்ச்சங்கம் கடந்த 30 வருடங்களில் தமிழகத்திலும் மற்றும் அமெரிக்காவிலும் பல சமூக நல பணிகளுக்காக நிதியுதவிகள் செய்து வருகின்றது. பல விழிப்புணர்வுக் கூட்டங்கள், இலக்கியக் கூட்டங்கள், தொழில் முனைவோர் கூட்டங்கள், தமிழ் நாட்டில் இருக்கும் தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்கு உதவி, ஆதரவற்றோர் இல்லம், ஏழை மாணவியருக்கு மகளிர் விடுதி மற்றும் சுனாமி, சாண்டி புயல், ஹார்வி புயல், சென்னை வெள்ளம், ஹூஸ்டன் வெள்ளம், கஜா புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளுக்கு நிதி திரட்டல் போன்ற பல மக்கள் நலப் பணிகளைச் செய்து வருகின்றது.

நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கம் அக்டோபர் 19, 2019 சனிக்கிழமை 30 ஆம் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. ஓய்வுப் பெற்ற காவல்துறை கண்காணிப்பாளரும் பேச்சாளருமான திரு.கலியமூர்த்தி அவர்களின் சிறப்புப் பேச்சு, திரைப்படப்பாடகி சின்மயி அவர்களின் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி, நியூ ஜெர்சி மக்களின் கலை நிகழ்ச்சிகள், குழந்தைகளுக்கான கணிணிப் பயிற்சி மற்றும் கல்லூரியில் சேர்வதற்கான செயல்முறைகள் பற்றிய உரையாடல் என விழா சிறப்பாக நடைபெற்றது.

1. போகி விழா என்பது கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது?

அ) அன்னக்கொடி விழா ஆ) இந்திர விழா. இ) சித்திரைத் திருவிழா ஈ) வேனில் விழா

# உவகை பொங்கும் தமிழர் திருநாள்!



விண்ணில் விரிந்த கதிராலே
வையம் ஒளியைக் கண்டதுவே!
மண்ணில் விளைந்த கதிராலே
மாந்தர் மகிழ்ச்சி கொண்டனரே!

புத்தம் புதிய அரிசியிலே
பொங்கல் பொங்கிப் பூரிப்பாய்த்
தித்திப் பான கரும்புடனே
படைய லிட்டு மகிழ்கின்றார்!

நித்தம் உழைப்பைத் தான்நல்கி
நிலத்தை உழுத காளைகட்கும்
சித்தம் மகிழும் வண்ணத்தில்
சிறப்புச் செய்து களிக்கின்றார்!

கத்தும் கடலின் அழகினையே
சுற்றத் தாருடன் கண்டிடவே
முத்தாய் ஒருநாள் தெரிவுசெய்து
'காணும் பொங்கல்' காண்கின்றார்!

சேற்றில் உழவர் நாற்றுநட்டு
நெல்லை விளைத்துத் தந்தால்தான்
சோற்றை நாமும் உண்டிடலாம்!
சுகமாய் நாளும் வாழ்ந்திடலாம்!

உழுவார் உலகிற் காணியென்றே
உரக்கச் சொன்னார் வள்ளுவனார் – ஆதலின்
உழவுத் தொழிலைப் புரிகின்ற
உத்தமர் தமையே போற்றிடுவோம்!

அனைவர்க்கும் இனிய தமிழர் திருநாள் வாழ்த்து!

நன்றி: திருமதி. மேகலா இராமமூர்த்தி









## சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம்

சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம் அக்டோபர் 19 ஆம் தேதி, 'அவர் லேடி ஆஃப் தி லேக்' பல்கலைக்கழகத்தில் உள்ள அரங்கத்தில் மிக நவீனமான முறையில், கோலாகலமாகத் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தியது. அதைத் தொடர்ந்து நவம்பர் 2 ஆம் தேதி, தீபாவளி SA எனும் 40,000 மக்கள் கலந்து கொண்ட மாபெரும் விழாவில் சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம் சார்பில் பல நிகழ்ச்சிகள் தொகுத்து வழங்கப்பட்டன.



## மத்திய இல்லினாய் தமிழ்ச்சங்கம்

மத்திய இல்லினாய் தமிழ்ச்சங்கத்தின் தீபாவளித் திருநாள், கடந்த நவம்பர் இரண்டாம் திகதி சனிக்கிழமையன்று ஆர்ஸ்சர்ட் டௌன் சமூகக் கூடத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சங்க அன்பர்களால் விரும்பித் தயாரிக்கப்பட்ட அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. 'ஒரு நிமிடத்தில் ஓர் தலைப்பு' என்ற உரையாடல் நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது. குடும்பத்தோடு கூடிய 'கம்பி மத்தாப்பு தீபாவளிக் கொண்டாட்டத்துடன்' விழா இனிதே நிறைவுற்றது.

## தென் ஜெர்சி தமிழ்ச்சங்கம் – தீபாவளிக் கொண்டாட்டம் 2019

தென் ஜெர்சி தமிழ்ச்சங்கம், 2019 தீபாவளி விழாவை நவம்பர் மாதம் 2 ஆம் நாள் 3 மணி அளவில் தொடங்கியது. விழாவில் குழந்தைகள் நம் விவசாயிகளைப் பற்றிய நிகழ்ச்சியினை அருமையாக நிகழ்த்தினர். அதை தொடர்ந்து ஒரு குழு நடனம் இருந்தது. திரு.B.H அப்துல் ஹமீது அவர்களின் பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சி மிகவும் சுவையார்வமுள்ள வகையில் அமைந்தது. பல உள்ளூர் பாடகர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று நிகழ்ச்சியை கலகலப்பாக்கினர். பின்னர், 'சென்னை மெலோடிஸ்' குழுவினர் நிகழ்த்திய பாட்டுக் கச்சேரியும் ரசிக்கும்படியாக இருந்தது. கண்களுக்கும், செவிகளுக்கும் மட்டுமின்றி, 'தோசை கிரில்' தென் இந்திய உணவகம் எங்கள் நாவிற்கும் ருசியான உணவினை அளித்தது. அத்துடன், எங்கள் தீபாவளி விழா நிகழ்ச்சிகள் 10;30 மணி அளவில் இனிதாக நிறைவடைந்தன..






2. 'திங்களிது தையடியே செந்தமிழ ரின்திருநாள்; இங்கிது போல் என்றைக்குமே என்னருந் தோழி இன்பம் நிலைகொள்ள வேண்டும்' – இந்த வரிகளுக்குச் சொந்தக்காரர்..

அ) பாரதியார் ஆ) புதுமைப் பித்தன் இ) பாரதிதாசன். ஈ) சுரதா






## கனடியத் தமிழர் பேரவை - ரொறன்ரோ

செப்டம்பர் 8, 2019 நாளன்று, கனடியத் தமிழர் பேரவையால் ஸ்காபரோ தொம்சன் நினைவுப் பூங்காவில் நடைபெற்ற பதினோராவது ஆண்டு, கனடியத் தமிழர் நீள்நடை மூலம் டொராண்டோ ஸ்கார்பாரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைக்கு, 79,000 டாலர்கள் திரட்டப்பட்டன. நூற்றுக்கணக்கான கனடியர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். அபிஷேகா லொயிட்சன் இந்நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தார். கனேடிய தமிழ் காங்கிரசின் தலைவர் சிவன் இளங்கோ, ரொறொண்டோ பல்கலைக்கழக அதிபர் விஸ்டம் டெட்டி, நிர்வாக இயக்குநர் லிசா லெமன், நாடாளுமன்ற உறுப்பினர் சல்மா ஷாஹிட் மற்றும் ரொறொண்டோ நகர கவுன்சிலர் ஜெனிபர் மக்கல்வி, டோனாரஸ் டோஸ்-கனடிய உயர் கல்விக்கான கல்லூரி, பொன்னியா விவேகானந்தன்-ரொறொண்டோ பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழி விரிவுரையாளர் ஆகியோர் சிற்றுரைகளை வழங்கினர். கனடியத் தமிழர் நீள்நடை 2019-இன் தலைவரான ஜீவிதா புவிராஜசிங்கம் நன்றியுரை ஆற்றினார். கூடுதல் விபரங்களுக்கு (www.tamilcanadianwalk.ca) என்ற இணையத்தளத்தை நாடவும்.





## கென்டக்கித் தமிழ்ச்சங்கம்

கென்டக்கி தமிழ்ச்சங்கத்தில், 2019-ன் 4 ஆம் காலாண்டு நிகழ்வாக, 'தீபாவளி இசைக் கொண்டாட்டம் மற்றும் வாழை இலை விருந்து', தீபாவளிச் சிறப்பு நிகழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டன. இதில்.கென்டக்கித் தமிழ்ச்சங்கத்தில் முதல் முறையாக வாழை இலை விருந்து மதிய உணவாக வழங்கப்பட்டது. விருந்தைத் தொடர்ந்து 3:30 மணிக்கு, தீபாவளி இசைக் கொண்டாட்டம் என்னும் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது. சங்கச் செயற்குழு மற்றும் தன்னார்வலர்களின் அளப்பரிய உழைப்பின் பயனாகவும், உள்ளூர் கொடையாளர்களின் பங்களிப்பாலும் மிகச் சிறப்பான முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த இசை நிகழ்ச்சி அனைவரது பாராட்டுக்களையும் பெற்றது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கண்டும், கேட்டும், கரவொலி எழுப்பியும் களித்து மகிழ்ந்தனர். விருந்துக்கு வந்திருந்த 300-க்கும் மேலான மக்கள் தங்களுடைய வீட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டதைப்போல் வயிறும், உள்ளமும் நிறைந்து, உணவின் சுவையையும், விருந்தோம்பலையும் மிகவும் பாராட்டிச் சென்றனர்.

## மிசௌரி தமிழ்ச்சங்கம் - முத்தமிழ் விழா

மிசௌரி தமிழ்ச்சங்கத்தின் முத்தமிழ் விழா அக்டோபர் மாதம் 27 ஆம் நாளில் சிறப்பாக நடந்தேறியது. குழந்தைகள் நடனம், வாத்திய இசை, பெரியவர்களின் ஜோடி நடனம் மற்றும் கோல்டன் ரிதம்ஸ் குழுவினருடன் சூப்பர் சிங்கர் புகழ் பிரகதி மற்றும் அர்ஜுன் பங்கேற்ற மெல்லிசை நிகழ்ச்சி எனப் பல்வேறு வகையிலான கொண்டாட்டங்கள் உறுப்பினர்களை உற்சாக வெள்ளத்தில் ஆழ்த்தின. தமிழ்ச்சங்கத்தின் ஒவ்வொரு நிர்வாகக் குழுவும், அதன் நிர்வாகக் காலத்தில், தமிழ்ச் சமூகத்திற்குப் பல்லாண்டு காலமாகத் தன்னலமற்ற சேவை புரிந்து வரும் மூத்த உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, நன்றி பாராட்டி கௌரவிப்பது வழக்கம். அதன்படி இந்த நிர்வாகக் குழுவினர், திரு.கோவிந்தராஜன் மற்றும் திருமதி.ஜெயா கோவிந்தராஜன் ஆகிய இருவரின் சேவையைப் பாராட்டி, வாழ்நாள் சாதனையாளர் விருதினை அனைவரின் கரகோஷத்துடன் வழங்கி சிறப்புச் செய்து மகிழ்ந்தது.





## நியூ யார்க் ஆல்பெநீ தமிழ்ச்சங்கம் – இசை மாலை

நியூ யார்க் ஆல்பெநீ தமிழ்ச்சங்கத்தில், நவம்பர் மாதம் 15 நாளன்று, லிசா கில் இடைநிலைப் பள்ளியில் 'கல்யாண்'ஸ் கோல்டன் ரிதம்ஸ்' இன்னிசை நிகழ்ச்சி நடந்தது. மாலை 6 மணி அளவில் அறுசுவை விருந்து வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, செவிகளுக்கு விருந்தான இசை நிகழ்ச்சி தொடங்கியது. திரைப்படப் பின்னணிப் பாடகர்கள் ஹரிஷ் ராகவேந்திரன், சாம் கீர்த்தனா, பவித்ரா, ராஜவேலு மற்றும் பிரகதி ஆகியோர் பாடினர். இந்த இசை வெள்ளத்தில் மூழ்க வந்த 400-க்கும் மேற்பட்ட இசை ஆர்வலர்கள், நிகழ்ச்சியின் நிறைவு வரை இருந்து ரசித்தனர். மேலும் சிலர் உற்சாகத்துடன் பாடல்களுக்கு நடனமாடியும் மகிழ்ந்தனர்.









## தென் மத்திய தமிழ்ச்சங்கம்

மெம்ஃபிசு நகரில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் மாபெரும் நிகழ்வான 'இந்தியத் திருவிழா', கடந்த நவம்பர் 2 ஆம் தேதியன்று நடைபெற்றது. தென் மத்தியத் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக "தமிழ்ச்சுவை" எனும் உணவு அரங்கமும், நம் தமிழ்க் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் காட்சிக்கூடமும் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு வகைகளை, அனைவரும் விரும்பி வாங்கி உண்டு மகிழ்ந்தனர். இந்தியாவின் அனைத்து மாநிலத்தவரும் பங்குபெற்ற கலைநிகழ்ச்சிகளில், தமிழ்ச்சங்க உறுப்பினர்களும் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர். தமிழீழத் தேசிய மாவீரர் நினைவு நாளான நவம்பர் 29 ஆம் தேதியன்று, சங்கப் பொறுப்பாளர்கள் திருமிகு. அரங்கநாயகி, திரு. சரவணக்குமார் மற்றும் முனைவர் சிதம்பரம் ஆகியோரின் முயற்சியால், முதன் முறையாக அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. முனைவர் சூரியன் பொன்னுசாமி சிற்றுரையாற்றினார்.

## சார்லட் தமிழ்ச்சங்கம்

சார்லட் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக ஜூன் 29 ஆம் நாளில், தெரு சுத்தம் செய்யும் பணி செவ்வனே நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 17 அன்று கோடை விழா புதுப் புது விளையாட்டுக்கள், பரிசுகள் என்று ஆனந்தமாய் கொண்டாடப்பட்டது. செப்டம்பர் 28 அன்று தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு உதவும் விதமாக 5 K நடை/ஓட்டம் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தண்ணீர்ப் பந்தல், முதல் உதவிக்கு மருத்துவர்கள் என்று அனைத்து ஏற்பாடுகளும் சிறப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. இவற்றோடு, கஜா புயலால் வாடிய நம் உறவுகளுக்காகத் திரட்டிய நிதியில் மிஞ்சியதை, நாகப்பட்டினம் செருத்தூர் அரசினர் மேனிலைப் பள்ளிக்கு கழிப்பறை கட்ட நன்கொடையாக அளிக்கப்பட்டது.



3. தை மாதத்தின் இரண்டாம் நாள் திருவள்ளுவர் ஆண்டு தொடக்கமாகக் கருதப்படுகிறது. அன்றைய ஆங்கில ஆண்டுடன் எந்த எண்ணைக் கூட்டினால் திருவள்ளுவர் ஆண்டு எண் கிடைக்கும்?

அ) 25 ஆ) 30 இ) 21 ஈ) 31.

## சிகாகோ முனைவர். திரு அழகப்பா இராம்மோகன் அவர்களின் நினைவாக, கானாடு காத்தானில் நடைபெற்ற "வள்ளுவர் அறிவகம்" நிகழ்ச்சியின் காட்சிப் படங்கள்



















## மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம்

செப்டம்பர் 28 ஆம் நாள், நகைச்சுவைக் கலைஞர் பிரவீன் குமார் அவர்களின் "தனிக்குரல் நகைச்சுவை" நிகழ்ச்சி நடைபெற்றது. சுமார் 400 பேர் குடும்பத்தினரோடு கண்டு களித்தனர். அக்டோபர் 1 ஆம் நாள் டெக்ஸாஸ் ஆளுநரிடம் "கிரீன் கார்டு" தேக்க நிலையைச் சீர்படுத்த வேண்டிக்கொள்ளும் விண்ணப்பம் மெட்ரோப்ளெஸ் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்டது. இயக்குநர் மற்றும் நடிகர் திரு. பார்த்திபன் அவர்களின் "ஒத்த செருப்பு" திரைப் படம் ஆஸ்கார் போட்டிக்கு அனுப்பப்பட்டுள்ளதைப் பாராட்டும் வகையில் அவரை அழைத்து, அக்டோபர் 26 ஆம் நாள் அவரின் திரைப்படம் திரையிடப்பட்டது. நவம்பர் 9 ஆம் நாளன்று, தீபாவளித் திருநாளும் ஈகைத் திருநாளும் ஒரே விழாவாகக் கொண்டாடப்பட்டன. 1500 உறுப்பினர்கள் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர். சொந்த ஊரைப் பற்றி குழந்தைகளின் உரையாடல், ஸ்ரீநிவாஸ் மற்றும் விஜய் பிரகாஷ் குழுவினரின் இன்னிசை விருந்து, பிரியாணி போட்டி மற்றும் பட்டாசு என்று இனிமையாக விழா நடந்தேறியது. நவம்பர் 23 ஆம் நாள் நடைபெற்ற, உலகத் தமிழ் இருக்கைகளின் பிரதிபலிப்பு மற்றும் "அன்று இந்த நிலத்தின் நிறம் சிவப்பு" நூல் வெளியீட்டு விழாவில் ஹார்வர்ட் தமிழ் இருக்கை புரவலர் திரு சம்பந்தம் அய்யா, திரு அமிர்தகணேசன் அய்யா, ஹூஸ்டன் தமிழ் இருக்கையின் நிர்வாகக் குழு உறுப்பினர் திரு நா. கணேசன் அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தோம்.

பேரவை 2020 விழாவைச் சிறப்பிக்க, பேரவைத் துணை ஒருங்கிணைப்பாளர் திரு. சுவாமிநாதன் அவர்களை, பேரவையின் துணைத் தலைவர், தமிழ்த்தேனீ குழுவினர், மேனாள் தொழில்முனைவோர் குழுத் தலைவர் முதலானோரைச் டிசம்பர் 8 அன்று, சந்திக்கச் செய்து அனுபவங்களைப் பகிரச்செய்தோம். மேலும் 'எம். டி. எஸ். வானொலி (MTS radio)' மூலம், பேரவை நிகழ்வைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை உலகெங்கும் நேரலை மூலம் பகிர்ந்து கொண்டோம்.

## அயோவா தமிழ்ச்சங்கம் – தீபத் திருவிழா கொண்டாட்டம்








அயோவா தமிழ்ச்சங்கத்தின் 2019 ஆண்டு தீபத் திருவிழாக் கொண்டாட்டம், நவம்பர் 2, 2019 அன்று இனிதே நடந்தேறியது. 400–க்கும் மேற்பட்ட சங்க உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். 130 குழந்தைகள் மற்றும் பெரியவர்கள், நடன, நாடக நிகழ்ச்சிகளில் உற்சாகத்துடன் பங்கு கொண்டு அனைவரையும் மகிழ்வித்தனர். நிகழ்ச்சியின் முடிவில் சுவையான சைவ, அசைவ உணவுகள் பரிமாறப்பட்டன.

இந்த அரையாண்டில் அயோவா தமிழ்ச்சங்கம் மற்றும் அயோவா தமிழ்ப்பள்ளியும் இணைந்து கடலூர் மாவட்டம், அ.அகரம் அரசு உதவி பெறும் பள்ளிக்கு, கல்வி உபகரணங்கள் மற்றும் அறைகலன்கள் வழங்கியது, 2019 ஆண்டின் நிகழ்வுகளின் முத்தாய்ப்பாக அமைந்தது.

அக்டோபர் 12, 2019 அன்று அயோவா தமிழ்ப்பள்ளி, தாயகம் சார்ந்த விளையாட்டுகளை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தது. தாயம், பல்லாங்குழி, பச்சைக்குதிரை, குலை குலையா முந்திரிக்கா, ஆடு புலி ஆட்டம், ஒரு குடம் தண்ணி ஊத்தி போன்ற விளையாட்டுகள் மாணவர்களுக்கு புதிய அனுபவத்தைத் தந்தது.

4. வேந்தன் மேய தீம்புனல் உலகமும்; சேயோன் மேய மை வரை உலகமும் எனத் தொல்காப்பியம் கூறும் திணை நிலங்கள் யாவை?

அ) குறிஞ்சி, முல்லை ஆ) மருதம், குறிஞ்சி. இ) நெய்தல், பாலை ஈ) குறிஞ்சி, பாலை







## ரிச்மண்ட் தமிழ்ச்சங்கம் – நம்ம ஊர் திருவிழா

ரிச்மண்ட் தமிழ்ச்சங்கம் அண்மையில் நடத்திய 'நம்ம ஊர் திருவிழா' நிகழ்ச்சியில், இப்பகுதியில் வாழும் பல மாநில இந்திய மக்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக வாஷிங்டனில் இருந்து வந்த தமிழ்ப் பாரம்பரிய பறை இசைக் குழுவினரின் பறை இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும், இதில் பொய்க்கால் நடனம் மற்றும் கொம்பு இசையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

நிகழ்ச்சியைக் காண வந்த பெரியவர்களும், சிறுவர்களும் அதில் கலந்து கொண்டு ஆடியும், இசைத்தும் மகிழ்ந்தனர். ஊர்த் திருவிழா நிகழ்ச்சியின் மற்றுமொறு சிறப்பம்சமாக கிராமப்புறத் 'தேநீர் கடை' போன்ற தோற்றம் அமைக்கப்பட்டது. இது அனைத்து மக்களையும் வெகுவாகக் கவர்ந்ததால் அதன் பின்னணியில் நின்று பலர் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். மேலும் இந்நிகழ்ச்சியில் சிறுதானிய சமையல் போட்டி, கோலப் போட்டி பெண்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அதில் பலரும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். விழாவின் சிறப்பம்சமாக உரியடி நிகழ்ச்சி, சுண்டல் வண்டி, தாயப் போட்டிகள் நடைபெற்றன.நம்ம ஊர் திருவிழா அமெரிக்காவில் வாழும் குழந்தைகளுக்கு நம் தமிழ் பாரம்பரியக் கலாச்சாரத்தை எடுத்துரைக்கும் விதமாக அமைந்தது.



## பாரதி கலை மன்றம் – ஹூஸ்டன்



பாரதி கலை மன்றம், செப்டம்பர் 15 ஆம் நாளில், தனது 45 ஆம் ஆண்டு நிறைவு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடியது. மன்றத்தை தோற்றுவித்து, வழி நடத்திய முன்னாள் தலைவர்களையும், ஆயுட்கால உறுப்பினர்களையும் பெருமைப்படுத்தும் வகையில் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் சிறப்பு அங்கமாக, தமிழ்ப்பள்ளி குழந்தைகள் கலந்து கொண்ட 'நீயா? நானா?' நிகழ்ச்சியைக் குறிப்பிட வேண்டும். இந்திய-அமெரிக்க வாழ்க்கை முறைகளை அலசி ஆராய்ந்த இளம் சிறார்கள், தத்தமது செறிவான கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டு அவர்களின் அறிவாற்றலையும் தன்னம்பிக்கையும் வெளிப்படுத்தினர். மேலும், கேட்டி தமிழ்ப்பள்ளியில் இயங்கி வரும் சிறார் நூலகத்தின் வளர்ச்சியாக, பாரதி கலை மன்றத்தின் முன்னாள் தலைவர். டாக்டர். திருவேங்கடம் ஆறுமுகமும், அவரின் மனைவி டாக்டர்.விஜயலட்சுமி திருவேங்கடமும் அன்பளிப்பாக வழங்கிய ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்கள் வாயிலாக பெற்றோருக்கான நூலகம் ஒன்று வடிவம் கொள்ளத் தொடங்கியுள்ளது.





## வளைகுடாப் பகுதித் தமிழ் மன்றம்



குறுகிய காலத்தில் (சுமார் 30 நாட்கள்) தமிழ் மன்றம் வாழை இலை விருந்தை அக்டோபர் 12, 2019 ஆம் தேதியன்று நடத்தியது. இது நுழைவுச்சீட்டுக்கள் அனைத்தும் தேக்கமின்றி முழுவதுமாக விற்கப்பட்ட ஓர் நிகழ்வு. தமிழ் மன்றத்தின் குழந்தைகள் தின விழா நவம்பர் 9, 2019ஆம் தேதியன்று நடைபெற்றது. தமிழர் ஆடற்கலைகளான கரகாட்டம், பரத நாட்டியம் மற்றும் பல ஆடல் நிகழ்ச்சிகள், நாடகம் போன்றவை நடைபெற்றன. தமிழ் மன்றத்தின் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுக்க பாடல் போட்டியின் இறுதிச் சுற்றும் நடைபெற்றது. அக்டோபர் 26, 2019, சனிக்கிழமை அன்று கலிபோர்னியாவின் ஃப்ரீமாண்ட் நகரில், வளைகுடாப் பகுதித் தமிழ் மன்றம், இந்தியா மேம்பாட்டு சங்கம் (AID-Association for India's development) மற்றும் அம்பேத்கர் கிங் படிப்பு வட்டத்தின் (AKSC-Ambedkar King Study Circle-California Bay Area Chapter) கலிபோர்னியா விரிகுடாப் பகுதி அத்தியாயத்துடன இணைந்து அறப்போர் இயக்கத்தின் (AI) அமைப்பாளர் திரு.ஜெயராம் வெங்கடேசன் அவர்களை அழைத்து வந்து ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.





## கொலம்பஸ் தமிழ்ச்சங்கம்

கொலம்பஸ் தமிழ்ச்சங்கம் நவம்பர் திங்கள் 10 ஆம் நாளில் நடத்திய 'கோல்டன் ரிதம்ஸ்' குழுவினரின் இலையுதிர்கால இன்னிசை மாலை, இரசிகர்களை இசை மழையில் நனைத்து மகிழ்வித்தது. அரங்கமே ஆடிக் களித்தது. கொலம்பஸ் தமிழ்ச்சங்கம் 'லைப் கேர் அலையன்ஸ் (Life Care Alliance)' எனும் தொண்டு நிறுவனத்தின் 'மீல்ஸ் ஆன் வீல்ஸ் (Meals On Wheels}' என அழைக்கப்படும் முதியோருக்கும், இயலாதோருக்கும் உணவு கொண்டு சேர்க்கும் அரும்பணியில் தன்னையும் இணைத்துக்கொண்டு, வாழும் தேசத்திலும் சமூகப் பணியைத் தன்னார்வலர்களுடன் சிறப்பாகத் தொடர்கிறது.

5. புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல் - எனப் பொங்கலைக் குறிப்பிடும் நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீறாப்புராணம் ஈ) சீவக சிந்தாமணி.



## சிகாகோ தமிழ்ச்சங்கம் - குழந்தைகள் தின விழா

சிகாகோ தமிழ்ச்சங்கத்தின் சார்பாக இந்த ஆண்டுக் குழந்தைகள் தின விழா கடந்த நவம்பர் மாதம் 9 ஆம் நாள் உட்டேல் பள்ளி அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. பிஞ்சு மனதில் பதிவது என்றும் அழியாது என்பதை மனதில் கொண்டு, இன்றும் என்றும் இவ்வுலகிற்குத் தேவையான "இயற்கை வளம் காப்போம்" என்பதைக் கருப் பொருளாகக் கொண்டு இந்த ஆண்டுக் குழந்தைகள் தின விழா வடிவமைக்கப்பட்டது. பறை, மெல்லிசை, நடனம், நாடகம், மாறுவேட நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டிகள், சொல் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் எனச் சிறுவர்களுக்குக் கேளிக்கை கலை நிகழ்ச்சிகளாக மட்டுமின்றி அவர்கள் திறமைகளைப் பறை சாற்றும் நிகழ்ச்சிகளாகவும் இந்த விழா நடைபெற்றது. அத்துடன், சிறுவர்களே நிகழ்ச்சி தொகுப்பாளர்களாகவும் மேடையேறி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். இந்நிகழ்ச்சிகளில் 150க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பேரார்வத்துடன் மேடையேறிக் கலந்துகொண்டது, காண வந்த மக்களை மகிழ்ச்சியிலும் ஆச்சரியத்திலும் திளைக்க வைத்தது. பார்வையாளர்கள் அவ்வப்போது மிக்க ஆரவாரத்துடன், சிறுவர்களைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். சிறுவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட கடின உழைப்பும், அயராத முயற்சியும், தளராத நம்பிக்கையும், காண்போரின் பாராட்டுதல்களைப் பெற்றுத்தந்தது என்பது கண்கூடாகத் தெரிந்தது.

இந்தக் குழந்தைகள் தின விழாவிற்கு மேலும் மெருகேற்றும் வண்ணமாக, மாண்புமிகு தமிழகத் துணை முதலமைச்சர்

ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி இளையோர்களை ஊக்குவித்தார்கள். மேலும் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் திரு ஓ.பி . இரவீந்திரநாத் குமார் அவர்களும், தமிழ் நாடு அரசு நிதித்துறை முதன்மை செயலாளர் திரு. கிருஷ்ணன் இ.ஆ.ப அவர்களும் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்கள். அவர்கள் முன்னிலையில் தங்கள் கலைத் திறன்களைக் காட்டியதால் சிறுவர்களும் பெருமையடைந்தார்கள். கடந்த சூலை மாதம், 10 ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெற்றிட, தமிழக அரசு 1 கோடி ரூபாய் நன்கொடை அளித்துச் சிறப்பித்தமைக்கு, தமிழக முதலமைச்சர் மற்றும் தமிழக துணை முதலமைச்சர் ஆகியோருக்கு, இந்த விழாவில் சிகாகோ தமிழ்ச் சங்கம் தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டது.

## கேன்சஸ் நகர தமிழ்ச்சங்கம்

கேன்சஸ் நகர தமிழ்ச்சங்கத்தின் இந்த வருடக் கலை விழா, நவம்பர் மாதம் 2 ஆம் நாளில், உள்ளூர் பள்ளியின் கலை அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது! 'பாரம்பரிய நடனம், திரைப்படப் பாடல்களுக்கான நடனம், இன்னிசைக் கருவிகளுடன் திரைப்படப் பாடல்கள்' எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் கண்டோர் மனங்களை கொள்ளை கொண்டன. நிகழ்ச்சியின் நிறைவாக ஆடை அலங்கார அணிவகுப்பில் பூனை நடை நடந்து வந்த மங்கைகள் எல்லோரின் கரவொலியைப் பெற்றனர்! இடைவேளைக்குப் பிறகு இந்தியாவில் இருந்து வந்த 'கல்யாண் கோல்டன் ரிதம்' குழுவினருடன் வந்திருந்த 'சூப்பர் சிங்கர்' பாடகர்கள் மற்றும் 'தனிக்குரல் நகைச்சுவை' (stand up comedy) நிகழ்ச்சிகள் எல்லோரையும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தின! இரவு விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது!










## சாக்கரமெண்டோ தமிழ் மன்றம்

சாக்கரமெண்டோ தமிழ் மன்றம், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்ப்புத்தாண்டு விழா நடத்தி வருகிறது. இந்த ஆண்டும் கடந்த மே மாதம் பால்சொம் மேல்நிலைப்பள்ளியில் இவ்விழா நடைபெற்றது. இந்த விழாவில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை கலந்துகொண்டு இயல், இசை, நாடகம் என முத்தமிழ் விருந்து படைத்து அனைவரையும் மகிழ்வித்தனர். சனவரி மாதம் நடந்த திருக்குறள் போட்டியில் வென்றவர்களுக்கு இவ்விழாவில் பரிசுகள் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்



## ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கம்




ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் அக்டோபர் மாதம் 20 ஆம் நாளில் நடைபெற்ற பண்டிகைக்காலக் கொண்டாட்டம், தமிழ்த்தாய் வாழ்த்து முழங்க, திருக்குறள்-விளக்கம் துலங்க இனிதே தொடங்கியது. நிகழ்வின் முத்தாய்ப்பாக விழாத் தலைமையேற்றுச் சிறப்புச் சொற்பொழிவாற்ற வருகை தந்திருந்த தமிழகக் காவல்துறை முன்னாள் கண்காணிப்பாளர் திரு.அ.கலியமூர்த்தி அவர்கள், “உறவுகளும் உணர்வுகளும்” எனும் தலைப்பில் மிகச் சுவையாகவும் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வண்ணமும் உரையாற்றினார். விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்வாக, மாணாக்கர்கள் மற்றும் பெரியவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் மேடையில் அரங்கேற்றப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. விழா ஏற்பாடுகளை சங்க உறுப்பினர்கள் அனைவருக்குமான மனநிறைவுடன் திறம்பட ஏற்பாடு செய்திருந்தனர்.

6. ‘தைஇத் திங்கள் தண்கயம் படியும்தண்கயம்’ என்ற நற்றிணைப் பாடலில் வரும் ‘தண்கயம்’ என்பது எதனைக் குறிக்கிறது?

அ) குளிர்ந்த ஆறு ஆ) குளிர்ந்த நீர் இ) குளிர்ந்த குளம். ஈ) குளிர்ந்த ஓடை








## மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கம்

மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கம் தனது தீபாவளி மற்றும் ஈகைத் திருவிழாவினை கடந்த டிசம்பர் 7 ஆம் நாளில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. அதில் கார்மல் நகர மேயர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். கோடை காலத்தில் நடத்தப்பட்ட பந்தாட்ட போட்டிகளில் வென்ற அணிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அறக்கட்டளையுடன் இணைந்து, சீர்காழியில் உள்ள 'அன்பாலயம்' குழந்தைகள் காப்பகத்திற்கு, நிதி உதவிகள் திரட்டப்பட்டன. உறுப்பினர்கள் ஆடிப்பாடி, விருந்து உண்டு மகிழ, திருவிழா இனிதே நிறைவுற்றது.

## அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் - தீபாவளித் திருவிழா



தீப ஒளித் திருநாளான "தீபாவளித் திருவிழாவை", மிகப்பிரம்மாண்டமான நிகழ்வாக அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் கொண்டாடியது. எங்குப் பார்த்தாலும் புன்னகையுடன் பெண்களும், ஆண்களும், மழலைகளும் வண்ண வண்ண உடைகளுடன் வலம் வந்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. சிறப்பு விருந்தினராக வந்திருந்த ஐயா பேராசிரியர் கு. ஞானசம்பந்தன் அவர்கள், சங்கத்தின் ஆண்டுமலர் மற்றும் சங்க உறுப்பினர்கள் பிரதீபா பிரேம், சங்கர் தங்கவேலு, ராஜி ராமச்சந்திரன் அவர்களின் முதல் நூலை வெளியிட்டார். பாடகி மாளவிகா மற்றும் பாடகர் கிருட்டிணா தலைமையில் வந்த இசைக்குழுவினர் அட்லாண்டா தமிழர்களை இசைவெள்ளத்தில் மிதக்கவிட்டனர்.

இசைநிகழ்ச்சியின் இடையில் ஐயா பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் காட்டாற்று வெள்ளம் போல், தமிழ்த் திரையிசைப் பாடல்களைப் பற்றி ஆற்றிய உரை ஒட்டுமொத்த நிகழ்வில் தீபாவளிச் சரவெடி போல் இருந்தது. எழுநூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் மிகவும் பொறுமையாக இருந்து, அறுசுவை உணவருந்திச் சென்றனர். பல மறக்க முடியாத தருணங்களை அட்லாண்டா வாழ் தமிழர்களுக்கு இந்த தீபாவளித் திருவிழா அள்ளி வழங்கியது.







## மினசோட்டா தமிழ்ச்சங்கம் – வாழையிலை விருந்து

தமிழர்களின் விருந்தோம்பல் சிறப்பினைக் கொண்டாடும் விதமாக நவம்பர் 3, ஞாயிற்றுக் கிழமை அன்று வாழையிலை விருந்து சிறப்பாக நடைபெற்றது. இந்த வருட வாழையிலை விருந்தில் முதன் முறையாக நெகிழிகளை (Plastics) பயன்படுத்தாமல், பாக்கு மட்டையில் செய்யப்பட்ட தட்டு, கரும்புச்சக்கையில் செய்யப்பட்ட தண்ணீர் குடிக்கக் குடுவை, பாயாசம் குடிக்கக் கிண்ணம், மரத்தில் செய்யப்பட்ட சிறிய மரக்கரண்டி போன்றவை பயன்படுத்தப்பட்டன. இவ்விருந்தின் முடிவில் செல்வி. ஜானிஸ் ஹனிபால் தனது முதல் மாதச் சம்பளத் தொகையை மினசோட்டாவில் தமிழ் படிக்கும் மாணவர்களுக்கான ஊக்கத்தொகை நிதிக்காக நன்கொடையாக வழங்கினார். அவருக்கு மினசோட்டாத் தமிழ்ச்சங்கமும், தமிழ்ப் பள்ளியும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டன.

## மிச்சிகன் தமிழ்ச்சங்கம் – இன்னிசை தீபாவளிக் கொண்டாட்டம்

மிச்சிகன் தமிழ்ச்சங்கத்தின் இன்னிசை தீபாவளிக் கொண்டாட்டம் நவம்பர் 16 அன்று இனிதே நடந்தேறியது.

அரோமா உணவகத்தின் அறுசுவை உணவை வயிறார சாப்பிட்ட பின் எல்லோரும் விழா அரங்கத்திற்குள் செல்ல, அங்கே டாக்டர். கண்ணிக்ஸ் கன்னிகேஸ்வரன் குழுவினரின் "யாதும் ஊரே" இசை நிகழ்ச்சி ஆரம்பித்தது. கண்ணிக்ஸ் குழு, நமது சங்க இலக்கியப் பாடல்களை மிகவும் அற்புதமாக வடிவமைத்தது நன்றாக இருந்தது. அந்த இசை நிகழ்ச்சிக்குப் பிறகு, சிறார்களின் வண்ண வண்ண நடனம் மேடையை அலங்கரிக்க, பார்க்க அழகாக இருந்தது. கோவையிலிருந்து வந்த 'பறை ஆசான் திரு சக்தி இராவணன்' அவர்களின் மேற்பார்வையில், 'டெட்ராய்ட் உணருயிர் கலைக்கூடத்தின்' பறையிசைக் கலைஞர்கள் மேடையை பறையின் நாதத்தால் அடித்து அற்புதம் செய்தனர். ஒரு நீண்ட நாளை, குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடு கலந்து, மிகவும் நன்றாகக் கொண்டாடிய கையோடு மக்கள் தங்களது பரிசு பையையும் பெற்று மகிழ்வோடு சென்றனர்.






7. "பெய்து புறந்தந்த பொங்கல் வெண் மழை" – இந்த வரிகள் அடங்கிய நூல் எது?

அ) அகநானூறு. ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) நற்றிணை






## கேரோலைனா தமிழ்ச்சங்கம் - முத்தமிழ் விழா

செப்டம்பர் 14 ஆம் நாளன்று, எழுத்தாளர் திரு. ஜெய மோகன் அவர்களின் உரை மற்றும் கலந்துரையாடலுக்கு கேரோலைனா தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. திரு. ஜெய மோகனின் “குறள் என்னும் கவிதை” என்ற தலைப்பில் அமைந்திருந்த உரையும், கலந்துரையாடலும் தேனில் நனைந்த பலாச்சுளைகளாக இனித்திருந்தன. அதுமட்டுமின்றி, கடந்த நவம்பர் மாதம் 2 ஆம் தேதி, ‘முத்தமிழ் விழா’ சிறப்பாக நடத்தப்பட்டது. விழாவில் குழந்தைகளும், பெரியோரும் சிறந்த நிகழ்ச்சிகளை அமைத்துப் பங்கேற்றார்கள். செயலாளரின் வரவேற்புரையோடு தொடங்கி, தாய்த் தமிழின் பெருமையை எடுத்து காட்டும் படியாக பாடல், நடனம், பேச்சு, கவிதை என பல்சுவையோடு இந்த முத்தமிழ் விழா அமைந்திருந்தது. செவிகளுக்கும், கண்களுக்கும் விருந்து படைத்த இந்த நிகழ்ச்சியில், வயிற்றுக்கும் விருந்து படைக்கும் விதமாக இரவு உணவு பரிமாறப்பட்டது. இறுதியில் சங்கத் தலைவரும், பொருளாளரும் நன்றியுரை தெரிவிக்க, விழா இனிதே நிறைவேறியது.





## ஒக்லஹோமா தமிழ்ச்சங்கம் - தமிழ்க்கூட்டம்

ஒக்லஹோமா தமிழ்ச்சங்கத்தின் 31 ஆவது தமிழ்க்கூட்டம் அக்டோபர் 26 ஆம் நாளில் சிறப்பாக நடந்தேறியது. திருக்குறள் ஒப்பு விக்கும் போட்டி, பரத நாட்டிய நடனங்கள், திரைப்படப் பாடல் நடனங்கள், நாடகம், மற்றும் கவிதை வாசிப்பு போன்ற சிறந்த நிகழ்ச்சிகள் இனிதே நடந்தன. தமிழுக்கும், ஒக்லஹோமா தமிழ்ச் சமூகத்திற்கும் பாடுபட்டவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. விழாவில் பல்சுவை உணவு வகைகளும் பரிமாறப்பட்டன. இந்த விழா அனைத்துத் தமிழ் பேசும் அன்பர்களையும் ஒருங்கிணைக்கும் விழாவாக நடந்தேறியது.



# போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றம் - தீபாவளிக் கொண்டாட்டம்

போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றத்தின் தித்திக்கும் தீபாவளிக் கொண்டாட்டம், 10/26/2019 அன்று சிறப்பாக நடைபெற்றது. இறை வணக்கத்துடன் தொடங்கி, வான்கூவர் (Vancouver) மேயர் மிஸஸ் ஒக்லே தலைமையில் குத்துவிளக்கு வைபவம், சுப்பிரமணிய நடனம் போன்றவை நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாய் அமைந்தன. போர்ட்லண்ட் மாநகரச் சின்னஞ்சிறு சிட்டுக்கள், வண்ணக் கோலங்களில் மின்மினி களாய் மின்னிய "சூப்பர் நடனம்" போட்டி நிகழ்ச்சி, மக்களின் சமூக விழிப்புணர்வை உயிர்ப்பித்த "மேஜிக் மீம்ஸ்" நிகழ்ச்சி, இருட்டின் விளிம்பை ஒளியின் பிம்பங்களில் ஒருங்கிணைத்த 'ஆரா' (Aura) நடன நிகழ்ச்சி, பரதம், பாரதம், பாரதி ஆகியவற்றை ஒன்றிணைத்த நாட்டியா அகாடமியின் நடன நிகழ்ச்சி, தீபாவளிக் கொண்டாட்டத்தின் பொருளை விளக்கும் கலாபாரதியின் நடன நிகழ்ச்சி, கவிதை, கட்டுரை, கொலு, ஸ்மூல் இசை (Smule), புகைப்படம், வரைதல் உள்ளிட்ட பல போட்டிகள் நடைபெற்றன. இவை அனைத்திற்கும் மகுடமாக, வீணையில் பேசும், மக்கள் மனதை மயக்கும், உள்ளத்தை உருகவைக்கும் கலைமாமணி "ராஜேஷ் வைத்யா" குழுவினரின் இசைச் சங்கமம், காண்போரின் மனதை பறிக்கும் வண்ண வண்ணத் தோரணங்கள், 50 வகையான 'பாகுபலி உணவு' என, 1300-க்கும் மேற்பட்ட தமிழ் உள்ளங்கள் ஒன்றிணைந்த உன்னத விழாவாக செவ்வனே நிறைவுற்றது!




## தமிழ் சிநேகம் தாம்பா

தாம்பா வாழ் தமிழர்களை மகிழ்விக்க, நவம்பர் மாதம் 3 ஆம் நாளன்று 'தமிழ் சிநேகம்' சின்னத்திரை மற்றும் வெள்ளித்திரையில் புகழ்பெற்ற கலைஞர்களைக் கொண்டு ஏற்பாடு செய்திருந்த விடுமுறைக் கொண்டாட்ட நிகழ்வில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டு பொழுது போக்கு நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தனர்.

'தமிழ் சிநேகம்' வருடந்தோறும் நடத்தி வரும் ஆண்களுக்கான கைப்பந்து மற்றும் பெண்களுக்கான எறிப்பந்துப் போட்டிகளை கடந்த நவம்பர் மாதம் 16 ஆம் தேதி நடத்தியது. 11 அணிகள் கலந்து கொண்ட ஆண்கள் கைப்பந்துப் போட்டிகளில் 'ராச்சா' அணியும், 6 அணிகள் கலந்து கொண்ட பெண்கள் எறிப் பந்துப் போட்டிகளில் 'சன் ஷைனர்ஸ்' அணியும் வெற்றி பெற்று சுழற் கோப்பையைக் கைப்பற்றின. போட்டி நாளன்று போட்டியாளர்களுக்கும் மற்றும் பார்வையாளர்களுக்கும் சுவையான மதிய உணவு மற்றும் சிற்றுண்டி பரிமாறப்பட்டன.




8. "தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ" - என தை மாதத்தின் பெருமை கூறும் நூல் எது?

அ) மணிமேகலை ஆ) பெரிய புராணம் இ) புறநானூறு ஈ) கலித்தொகை.






## டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேஷன் - தீபாவளிக் கொண்டாட்டம்.

டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேஷன் (TCTA) சார்பில் நவம்பர் 16 ஆம் தேதி தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட்டது. டாக்டர் ஜோ ஷெரினியன் அவர்கள் நவம்பர் 22, 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் 'பறை பயிற்சி' அளித்தார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில், ஆர்வமுள்ள சங்க உறுப்பினர்கள், எவ்வாறு பறையைப் பயன்படுத்துவது, எப்படிப் பறையுடன் நடனமாடுவது என்பதைக் கற்றுக்கொண்டனர். எங்கள் தமிழ்ப் பாடசாலை (TCTP) மாணவர்களான சாய்ப்ரானவ், மணிகண்டன் மற்றும் ரோஹித் ரவிச்சந்திரன் ஆகியோர் நமது செம்மொழியாம் தமிழ் மொழியில் இருமொழி முத்திரைத் தேர்வை வெற்றிகரமாக முடித்தனர்.




## மாநகர மில்வாக்கி தமிழ்ச்சங்கம்




மில்வாக்கி மாநகரத் தமிழ்ச்சங்கத்தின் 2019 தீபாவளி | கிறிஸ்துமஸ் | மிலாடி நபி திருவிழாக் கொண்டாட்டம் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் தேதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழா, நமது உள்ளூர் தமிழர்களின் கலைத் திறமைகளை மேடையேற்ற நல்ல வாய்ப்பாய் அமைந்தது. விழாவில் நூற்றுக்கணக்கான குழந்தைகளும், பெரியவர்களும் ஆடிப் பாடி, நடித்துத் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். விழாவில், மதியம் சைவ, அசைவ உணவு வகைகள் பரிமாறப்பட்டு, அனைத்து உறுப்பினர்களுக்கும் 2020 ஆம் ஆண்டு மில்வாக்கி மாநகரத் தமிழ்ச்சங்க நாட்காட்டியும், பலகாரமும் அளிக்கப்பட்டன. மில்வாக்கி மாநகரத்தில் சமூகப் பணி ஆற்ற ஏதுவாய், கடந்த டிசம்பர் 14, 2019 நாளன்று, ஏழாம் மற்றும் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு "குழந்தைகள் தலைமை ஆற்றல்" என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மில்வாக்கி மாநகர மாநில பிரதிநிதி திரு. டான் நாடல் தலைமை ஏற்று உரையாற்றினார். நிகழ்ச்சியில் மாநகரில் வசிக்கும் பல தொழில் சார் வல்லுநர்கள் பிள்ளைகளிடம் உரையாற்றினர். 'பிள்ளைகளுக்கான நிதி விழிப்புணர்வு' குறித்தும் விவாதிக்கப்பட்டது.









## கனெக்டிகட் தமிழ்ச்சங்கம் – தீபாவளித் திருநாள் கொண்டாட்டம்

கனெக்டிகட் தமிழ்ச்சங்கத்தின் தீபாவளித் திருநாள் கொண்டாட்டமாக, நவம்பர் திங்கள் 17 ஆம் நாள், வெர்னான் மைய நடுநிலைப் பள்ளியில், 'கோல்டன் ரிதம்ஸ்' இசைக் குழுவினருடன், பின்னணிப் பாடகர்கள் ஹரிஷ் ராகவேந்திரா, பிரகதி, சாம் கீர்த்தன், பவித்ரா மற்றும் விஜய் டி.வி.யின் 'கலக்க போவது யாரு' புகழ் ராஜவேலு இணைந்து வழங்கிய 'கிராண்ட் மியூசிகல் ஈவினிங்' இசைக் கச்சேரி மிகச் சிறப்பாக நடந்தேறியது.

## நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்கம்

நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்கம் மாசச்சூசெட்டில், நவம்பர் 2 ஆம் நாளில் நடத்திய குழந்தைகள் தினவிழாவில், 'கணியன் பூங்குன்றனார்' மையக் கருத்தில் குழந்தைகள் அனைவரும் கலந்துகொண்டு தங்கள் அனைத்து திறனையும் வெளிப்படுத்தினார்கள். விழாவின் சிறப்பு, முதன் முதலாக தமிழ் செவ்விசை போட்டியும், தமிழ் செவ்விசை விருந்தும் தனியே அரங்கேற்றப்பட்டது. மேலும் குழந்தைகளுக்கான திருக்குறள் போட்டி, பேச்சுப் போட்டி, வார்த்தை விளையாட்டுப் போட்டி மற்றும் நடனப் போட்டி இந்த முறையும் சிறப்பாக நடந்தது. அடுத்தாக, தித்திக்கும் பொங்கல் விழா 2020 பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி சிறப்பாக நடைபெற உள்ளது.



9. சல்லிக்கட்டு என்ற சொல்லில் உள்ள 'சல்லி' என்பது குறிப்பிடுவது என்ன?

அ) சிறப்புப் பரிசு ஆ) பெரிய கொம்பு இ) சிறு காசு. ஈ) பெரிய ஆபரணம்

## டென்னசி தமிழ்ச்சங்கம்





டென்னசி தமிழ்ச்சங்கம் நடத்திய விளையாட்டு நிகழ்வில் எறிப்பந்து, பூப்பந்து, கிரிக்கெட் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. இம்முறை புதிதாக சிறுவர்களுக்கு ‘டென்னிஸ் போட்டி’ நடத்தப்பட்டு பரிசளிக்கப்பட்டது. விழாவில் முன்னாள் அமைச்சர் திரு. நெப்போலியன் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார். டென்னசி தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்கள் ஒரே குடும்பமாக கூட்டாஞ்சோறு சமைத்து ஆடிப் பாடி மகிழ, சங்கத்தின் மூலம் பூங்காவில் ஓரிரு நாட்கள் தங்குவதற்கு முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும், குழந்தைகளின் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் டென்னசி தமிழ்ச் சங்கம் திருக்குறள் ஒப்புவித்தல், ஓவியம் வரைதல் போன்ற போட்டிகள் நடத்தி பரிசளித்தது. திருக்குறள் போட்டி பங்கேற்பாளர்களுக்குப் பொன்முடிப்பும் வழங்கப்பட்டது.

## தமிழ் மக்கள் மன்றம் – கொலு போட்டி 2019



தமிழ் மக்கள் மன்றம் சார்பில், நவராத்திரியை முன்னிட்டு “கொலு போட்டி 2019”, முதன் முறையாக நியூ இங்கிலாந்தில் நடத்தப்பெற்றது. இதில் நியூ இங்கிலாந்தின் 6 மாகாணங்களிலிருந்தும் பலர் உற்சாகமாகப் பங்கு கொண்டு, தங்கள் கற்பனைக்கேற்ப, 3 முதல் 9 படிகளில் தங்கள் கொலுவின் புகைப்படங்கள் மற்றும் காணொளியுடன் அனுப்பி வைத்தனர். திருமதி. ரஞ்சனி சைகல், திருமதி. சுமதி நாராயணன், திருமதி. தீபா ஜேக்கப் நடுவர்களாக வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்தனர். முறையே, திருமதி. சுபாஷினி ராமன், திருமதி. சிந்துஜா ஸ்ரீராம், திருமதி.காயத்ரி கிருஷ்ணன் முதல் மூன்று இடங்களை வென்றனர். இவர்களுக்குத் தமிழ் மக்கள் மன்றத்தின் பொங்கல் விழாவில் சப்தீகா என்டர்பிரைசஸ் பரிசுகள் வழங்க இசைந்துள்ளனர்.

## ரோட் ஐலண்டு தமிழ்ச்சங்கம்




தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கடந்த நவம்பர் மாதம் 3 ஆம் நாளில் ரோட் ஐலண்டு தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஈஸ்ட் ப்ராவிடண்சில் உள்ள ஒன்னா மோனிஸ்–ஜான் பூங்காவில் பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சியோடு தீபாவளியைக் கொண்டாடினோம். அதனைத் தொடர்ந்து நவம்பர் 9 ஆம் திகதியில் 2019 கிரான்ஸ்டன் பள்ளி வளாகத்தில் ‘ரிட்ஸ் தீபாவளி 2019’ கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. குழந்தைகள் தீபம் ஏந்தி வர அழகாகத் துவங்கி, சிறுவர் மற்றும் பெரியவர்களின் ஆடல், இசையுடன் கூடிய பாடல் மற்றும் நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளுடன் விழா இனிதே நிறைவுற்றது. இப்பகுதிவாழ் இந்தியக் குடும்பங்களுக்கு இவ்விழா இன்பமூட்டும் நிகழ்வாக அமைந்திருந்தது.





## வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்: குழந்தைகள் தினம் மற்றும் 10 ஆம் ஆண்டு சிறப்புத் தமிழிசை விழா

நவம்பர் 3, 2019 அன்று குழந்தைகள் தின விழாவினை வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் கொண்டாடியது. 40 ஆண்டுகளாக தமிழ்ச்சங்கத்தின் தலைவர்களாக இருந்து பணியாற்றிய நல் உள்ளங்களுக்கு மேடையில் பாராட்டு செய்யப்பட்டது. வழக்கம்போல் உள்ளூர் தமிழ்க் குழந்தைகளின் மாறுவேட அணிவகுப்பு, தந்தை மகன் பாரம்பரிய உடைகள் நிகழ்ச்சி, கலைநிகழ்ச்சிகள், தமிழ்ப்பள்ளிகளின் சங்கமம் முதலிய நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 70 கவனகர் முனைவர் கலை செழியன் சிறப்பு அழைப்பளாராக கலந்துகொண்டு தமிழர் மரபுக்கலைகளில் ஒன்றான கவனகக் கலையை செய்துகாட்டி விளக்கி, வந்திருந்தோரை மிகுந்த வியப்பில் ஆழ்த்தினார். கலை செழியன் அவர்கள், எட்டுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகளுக்குச் சென்று குழந்தைகளுக்கு இந்த அரிய கலைகளை செய்துகாட்டி பயிற்சிபெற வாசிங்டன் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. டிசம்பர் 14 அன்று சங்கத்தின் 10 ஆம் ஆண்டு தமிழிசை விழா சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் தமிழிசை பாடி மகிழ்விக்கப் பதிவு செய்துள்ளனர்.





## அர்கன்சாஸ் தமிழ்ச்சங்கம் – தீபாவளித் திருநாள் விழா

அர்கன்சாஸ் மாகாணத்தின் தலைநகர் லிட்டில்ராக் நகரில் தீபாவளித் திருநாள் அர்கன்சாஸ் தமிழ்ச்சங்கம் சார்பில் அக்டோபர் 26 2019 ஆம் நாளில் கொண்டாடப்பட்டது. மாலை 6 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. திரு. வள்ளிநாயகம் இறைவணக்கம் பாடினார். திருமதி பாகம்பிரியாள் வள்ளிநாயகம் மற்றும் திருமதி கோதை மோகன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழாவினைத் துவக்கி வைத்தார்கள். தலைவர் திரு. மகிழ் இராஜேந்திரன் வரவேற்றுப் பேசினார். பின்னர் சங்க உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகளை பாலசங்கர் மற்றும் அக்ஷய் ஆகியோர் தொகுத்து வழங்கினர். கலை நிகழ்ச்சிகளுக்கு நடுவில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டிகளை திரு ஜவஹர் ஒருங்கிணைத்து வழங்கினார். நிறைவில் செயலாளர் திரு மீனாட்சிசுந்தரம் வள்ளிநாயகம் நன்றி கூறினார். தாயக பாரம்பரிய விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது. விழாவில் கலந்து கொண்டவர்களுக்குத் தீபாவளிப் பட்டாசுகள் வழங்கப்பட்டன. விழா ஏற்பாடுகளைச் சங்கச் செயற்குழுவினர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

10. பொங்கல் என்பது கீழ்க்கண்ட எதனை ஒட்டி எழுந்த விழாவாக இருக்கலாம்?

அ) பனிமுடங்கல். ஆ) முன்பனி இ) அறுவடை ஈ) கூதிர்

# டிசம்பர் 2019 சென்னையில் நடந்த வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் தமிழிசை விழா காட்சிகள்







வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம்
இணைந்து நடத்தவிருக்கும்

# பேரவையின் 33ஆவது தமிழ் விழா

## அட்லாண்டா சூலை 3-5, 2020



# FeTNA Tamil Convention 2020

**ATLANTA**

# FeTNA

**July 3rd to 5th , 2020**

**Contact: Ezhilan, Swami(coordinators)**

**Sundar (Fetna President)**

**Email: fetna@gatamilsangam.org**

## அனைவரும் வருக! ஆதரவு தருக!

## *FeTNA and GATS Invites You All*

www.fetna.org

www.gatamilsangam.org